வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632


விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ——— ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 | 14.07.2026 செவ்வாய்க்கிழமை | இதழ் : 189 | பக்கங்கள் : 08




மாருதி
Money Exchange (PvT) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# தமிழ் - முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து முக்கியத்துவம் வாய்ந்த கூட்டு!

## காணி உள்ளிட்ட அடிப்படைப் பிரச்னைகளுக்கு ஒன்றிணைந்து தீர்வு காணத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை. 14


இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பமாக, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 6 பிரதான தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் பொது இணக்கப்பாட்டுடன் புதிய கூட்டணியாக ஒன்றிணைந்து செயற்பட தீர்மானித்துள்ளன.

இதற்கமைய, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, இலங்கை தமிழ் அரசு கட்சி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கொழும்பிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தித்து

07



# நீதியரசர்கள் வயதெல்லையை நினைத்தபடி நீடிக்கமுடியாது!



## சிரேஷ்ட சட்டத்தரணி பிரதீபா மஹாநாமஹேவா

கொழும்பு, ஜூலை. 14

உயர்நீதிமன்றங்களின் நீதியரசர்களின் வயதெல்லையை நினைத்த பிரகாரம் நீடிக்க முடியாது. நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தே மேற்கொள்ள வேண்டும் என சிரேஷ்ட சட்டத்தரணி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

நீதியரசர்களின் வயதெல்லையை நீடிக்க அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

ஊழல் மோசடியற்ற அரசொன்றை கட்டியெழுப்புவதற்கே மக்கள் இந்த அரசாங்கத்துக்கு ஆணை வழங்கியிருக்கிறது. அவ்வாறான அரசொன்றை அமைத்துக்கொள்ளும்போது தானாகவே பொருளாதார பிரச்னையும் இல்லாமல் போகிறது.

அவ்வாறானதொரு நிலைமைக்கு முக்கியமாக நீதிமன்றங்களின் வழக்குகள் விரைவாக தீர்க்கப்படவேண்டும். அதற்கு நீதிபதிகளின் அறிவு, திறமை அனுபவம் முக்கியமாகும். அதன் பிரகாரம் நீதிமன்ற நடவடிக்கைகளை செயற்திறமையுடன் மேற்கொள்ள அரசாங்கம் அனைத்து

07

## பேராசிரியர் ரகுராம் தொடர்ந்த வழக்கு;

# அவதூறு பரப்பியவர்களின் பதிவுகளை உடன் அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை. 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் அவதூறுகளை பரப்பியவர்களின் பதிவுகளை அகற்றுவதுடன், பேராசிரியர் தொடர்பாக எந்த அவதூறு பதிவுகளையும் செய்யக் கூடாது என இடைக்கால கட்டளை வழங்கிய பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம், எதிர்மனுதாரர் ஒருவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கை

07

# சாவகச்சேரி முன்னாள் உபதவிசாளர் தாக்கல் செய்த வழக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை. 14

யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் பதவி மற்றும் நகர சபையின் உறுப்புரிமையில் இருந்து தன்னை நீக்கி, வடக்கு மாகாண ஆளுநரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக் கோரியும்,

அதற்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரியும், ஞானப்பிரகாசம் கிஷோர் தாக்கல் செய்த

07

# பிள்ளையானின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு!

மட்டக்களப்பு, ஜூலை. 14

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் ஐந்து பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ள பிள்ளையான் என்ற முன்னாள்

07

# புதன் தவிர்ந்த அனைத்து நாள்களிலும் வடக்கு நகராந்திர கடுகதி ரயில்சேவை!

## முடிவை மாற்றியது ரயில்வே திணைக்களம்

கொழும்பு, ஜூலை. 14

கல்கிஸையில் இருந்து காங்கேசன்துறை வரையான தினசரி நகராந்திர கடுகதி ரயில் சேவையை வாரத்தில் நான்கு நாள்களாகக் குறைப்பதற்குத் தீர்மானித்த ரயில்வே நிர்வாகம், அது தொடர்பில் எழுப்பப்பட்ட அதிருப்திக் குரல்களை அடுத்து அந்தச் சேவையை வாரத்தில் ஆறு நாள்களுக்கு நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றது. இப்போதைய நிலையில் புதன் கிழமை மட்டுமே வடக்குக்கான நகராந்திர கடுகதி ரயில் சேவை நடைபெற மாட்டாது.

பழுதடைந்திருக்கும் ரயில் இயந்திரம் ஒன்றை விரைந்து திருத்துவதன் மூலம் வரும் 20ஆம் திகதிக்குப்

07

# பலாலி போராட்ட களத்தில் கொட்டகை அமைப்பதற்கு அனுமதி பெற்றுத் தருக!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை. 14

பலாலி போராட்டக் களத்தில் கொட்டகை அமைப்பதற்கு அனுமதி தருமாறு பொலிஸாருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இராணுவ வசமுள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி பலாலி உதயகலைவாணி மக்கள் ஒன்றியத்தினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

07

# வடக்கு, கிழக்கில் முழுமையடையாத வீடமைப்பு திட்டங்கள் கணக்கெடுப்பு!

கொழும்பு, ஜூலை. 14

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முழுமையடையாமல் கைவிடப்பட்டுள்ள அரசாங்க வீடமைப்புத் திட்டங்கள் குறித்து அரசாங்கம் புதிய கணக்கெடுப்பொன்றை ஆரம்பித்துள்ளது.

கடந்தகால அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களின் கீழ் சுமார் ஆறாயிரம் வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாக வீடமைப்பு, நிர்மாண மற்றும் நீர்வழங்கல் பிரதி அமைச்சர் டி.பி. சரத் குறிப்பிட்டார்.

எனினும், குறித்த வீடுகளில், அநேகமானவற்றின் நிர்மாணப் பணிகள் ஆரம்ப

07

# எச்.ஐ.வி. தொற்றுகள் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை. 14

இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுகள் அதிகரித்து வருவதாகவும், கொழும்பு மற்றும் கம்பஹாவில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் பதிவாகியுள்ளதாகவும் சமூக மருத்துவ ஆலோசகர் சத்யா ஹெரத் தெரிவித்துள்ளார்.

நேற்று சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் எச்.ஐ.வி பாதிப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

07

# இளம் வயதினர் திருமணம் குழந்தை பிறப்புத் தாமதம்!

## பொருளாதாரச் சூழலே முக்கிய காரணம்

கொழும்பு, ஜூலை. 14

இளம் வயதினர் திருமணம் மற்றும் குழந்தை பிறப்பைத் தள்ளிப்போடுவது குடும்ப வாழ்க்கையை நிராகரிப்பதாகக் கருதக்கூடாது, மாறாக தற்போதைய பொருளாதார மற்றும் சமூகச் சூழலுக்கு அவர்கள் அளிக்கும் பதில்களாகவே அதைப் பார்க்க வேண்டும் என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மக்கள் தொகையியல் பேராசிரியரும், இலங்கை மக்கள் தொகை சங்கத்தின் தலைவருமான பேராசிரியர் மனோரி

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலஞ்ச ஊழல் ஒழிப்பை டிஜிற்றல் மயமாக்குக!

## சர்வதேச நாணய நிதியம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 14

ஊழல் அபாயங்களைக் குறைப்பதற்காக, பாரம்பரிய காகிதக் கோப்பு முறையை முற்றாக நிறுத்திவிட்டு, "மத்தியப்படுத்தப்பட்ட மின்னணு சொத்து மற்றும் பொறுப்புப் பிரகடன முறைமையை" கட்டாயமாக்குமாறு சர்வதேச நாணய நிதியம், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

2026 ஜூன் / ஜூலை மாதங்களுடன் முடிவடைந்த சொத்துப் பிரகடனங்களைச் சமர்ப்பிக்கத் தவறிய அனைத்து அரச ஊழியர்களுக்கு எதிராகவும், கடுமையான நிதி அபராதங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளை எடுக்க இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்காக, ஆணைக்குழுவில் நிலவும் மனித வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, உடனடியாகப் புதியவர்களை ஆட்சேர்ப்பு செய்யுமாறு அரசாங்கத்துக்கு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தற்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியின் 5 ஆவது மற்றும் 6 ஆவது மீளாய்வுகளுக்குப் பிறகு, அரசியல் களத்தில் உள்ள முக்கிய புள்ளிகள் மற்றும் உயர்மட்ட நிதிக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்கான பொறுப்பு நேரடியாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2025-2029 காலப்பகுதிக்கான தேசிய ஊழல் எதிர்ப்புச் செயல்திட்டத்தின் கீழ், ஆணைக் குழுவின் அதிகாரங்கள் தனியார் துறையின் மோசடிகளைக் கட்டுப்படுத்தும் வரை விரிவுபடுத்தப்படுவதுடன், நிறுவனங்களின் உண்மையான உரிமையாளர்களைக் கண்டறிந்து, பணமோசடியைத் தடுக்கும் சர்வதேசத் தரநிலைகளுக்கு இலங்கையை உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன.

# ஓய்வு பெறும் வயதெல்லை மாற்றம் குறித்து ஆராய்வு!

கொழும்பு, ஜூலை. 14

ஓய்வுபெறும் வயதை மாற்றுவது தொடர்பில் தற்போது பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கோரிக்கைகள் கிடைத்து வருவதாகவும், இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற மீரிகம வைத்தியசாலையின் சிறுநீரகக் கற்களை அகற்றும் புதிய சிகிச்சை பிரிவை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

பல்வேறு தொழில் வல்லுநர்களால் இது தொடர்பில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கமைவாக இந்தக் கோரிக்கைகளை பரிசீலித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஏற்கனவே பல்வேறு தரப்பு தொழில் வல்லுநர்களிடமிருந்தும் கோரிக்கைகள் கிடைத்துள்ளன. மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மேல் நீதிமன்றங்களில் மாத்திரமன்றி சுகாதார சேவையில் உள்ள சில தொழில் வல்லுநர்களிடமிருந்தும் கோரிக்கைகள் வந்துள்ளன.

சிறைச்சாலைகள் திணைக்களத்திலிருந்தும் கோரிக்கைகள் உள்ளன. ஏனைய சில தொழில் வல்லுநர்கள் தங்களால் மேலும் சிறிது காலம் பணியாற்ற முடியும் எனத் தெரிவித்து, இந்த ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதற்கான யோசனையொன்றை முன்வைத்துள்ளனர்.

சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். ஆனால் ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் அந்தக் கோரிக்கைகளை நாம் பரிசீலித்து வருகிறோம்-என்றார். (அ)

# கட்டாய உழைப்பின் மூலம் தயாரிக்கப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்வதற்கு தடை!

கொழும்பு, ஜூலை. 14

கட்டாய உழைப்பைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருள்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த புதிய ஒழுங்குமுறை ஜூலை 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்படி, கட்டாய உழைப்பின் மூலம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அகழ்ந்தெடுக்கப்பட்ட, தயாரிக்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட எந்தவொரு பொருளையும் இறக்குமதி செய்வது முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தீர்மானங்களை கருத்தில் கொண்டு, இந்த ஒழுங்குமுறை எந்தெந்தப் பொருள்கள் அல்லது நாடுகளுக்குப் பொருந்தும் என்பதை அரசாங்கம் அவ்வப்போது தீர்மானிக்கும் என உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் கட்டாய உழைப்பால் தயாரிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை, இறக்குமதியாளர்கள் இலங்கைச் சுங்கத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கட்டாய உழைப்பின் மூலம் தயாரிக்கப்பட்ட பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுப்பதற்கான போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனக் கூறி, இலங்கை உள்ளிட்ட 60 நாடுகளின் மீது மேலதிக இறக்குமதி வரி விதிக்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் முன்மொழிந்திருந்தார்.

இந்த முன்மொழிவின் கீழ், இலங்கை மீது 12.5 வீத மேலதிக இறக்குமதி வரி விதிக்கப்படலாம் எனக் கூறப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து, கட்டாய உழைப்பு தொடர்பான சட்டங்களை வலுப்படுத்தும் நோக்கில் இந்த தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# கைத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை. 14

கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த இளைஞர் ஒருவர் மேல் மாகாண தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் இரவு மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரயில் வீதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாண தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹரகம, ரயில் வீதிப் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாண தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# மீரிகமவில் புதிதாக சிறுநீரகக் கல் அகற்றும் சிகிச்சை மையம் திறப்பு!

கொழும்பு, ஜூலை. 14

கம்பஹா மாவட்டத்தின் மீரிகமவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள "சிறுநீரக கல் அகற்றும் சிகிச்சை மையம்" நேற்று முன் தினம் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் மக்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டது.

நாட்டில் சிறுநீரக கல் நோயாளிகளின் அறுவைச் சிகிச்சைக்கான 5,000 இற்கும் மேற்பட்ட காத்திருப்புப் பட்டியலைக் குறைக்கும் நோக்கில் இந்த மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத இந்தத் திட்டம், இலங்கை சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் மூன்றே மாதங்களில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

புதிய எண்டோயுரோலாஜிக் கல் தொழில்நுட்ப வசதிகளுடன் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் எந்தவொரு பகுதியைச் சேர்ந்த சிறுநீரக அறுவைச் சிகிச்சை நிபுணரும், தமது நோயாளிகளை இங்கு அழைத்து வந்து நவீன வசதிகளுடன் அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ)

# வனஜீவராசிகள் திணைக்களத்தின் சகல தொழிற்சங்கங்களும் நேற்று போராட்டம்!

கொழும்பு, ஜூலை. 14


வனஜீவராசிகள் அதிகாரிகள் நேற்று பணிக்குச் சமூகமளிக்காமல் சுகயீன விடுமுறையைப் பெற்று,தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, வனஜீவராசிகள் திணைக்களத்தின் அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து நேற்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

சுகயீன விடுமுறைப் போராட்டத்துடன் இணைந்து, பத்தரமுல்லையில் உள்ள வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு முன்பாகப் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும்!

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை



கொழும்பு, ஜூலை. 14

காலநிலை மற்றும் வானிலை மாற்றங்கள் குறித்து கவனம் செலுத்துவது மக்களின் நலன் கருதிய கடமையாகும். இது பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு மட்டுமன்றி, உணவு மற்றும் நீர் பாதுகாப்பிற்கும் மிக அவசியமான ஒன்றாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற காலநிலை மாற்றங்கள் தொடர்பான பேரவையை விளித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த பேரவையின் இணைத் தலைவர்களாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பேராசிரியர் அபேவிக்ரம ஆகியோர் செயற்படுகின்றனர்.

இது தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயம் என்பதால், முன்கூட்டியே திட்டமிட்ட கட்டுப்பாடுகளை நோக்கிச் செல்ல பல்வேறு தரப்பினருடன் பொதுவான இணக்கப்பாட்டை எட்ட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் ஒவ்வொரு மாதமும் இரண்டு வாரங்களுக்குள், இந்த பேரவை ஒரு நாள் கூட வேண்டும். இது ஒரு தனிநபரின் பணியல்ல. காலநிலை ஆய்வாளர்கள், அறிஞர்கள் மற்றும் சுயாதீன ஆலோசனைக் குழுக்கள் எனப் பலதரப்பட்டோர் இதில் இணைவதால், கட்சி அரசியல் பேதமின்றி இந்த பேரவை செயற்படுகிறது என்று அவர் கூறினார்.

காலநிலை மாற்றத்தினால் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து மேலும் கலந்துரையாடப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றங்கள் குறித்து கட்சி பேதமின்றி, விஞ்ஞான ரீதியான தரவுகள் மற்றும் தகவல்களை மையமாகக் கொண்டு, பாதிப்புகள் ஏற்படுவதற்கு முன்னரே அதற்கேற்ப தயாராக இருக்கும் ஒரு நாட்டை உருவாக்குவதே இந்த பேரவையின் முக்கிய நோக்கமாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எல் நினோ மற்றும் லா நினோ காலநிலை மாற்றங்கள் குறித்தும், அவை அடுத்தடுத்த பருவ காலங்களில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என் பது குறித்தும் இங்கு கலந்துரை யாடப்பட்டது. எமக்கு அறிமு கமில்லாத காலநிலை மாற்றங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட் டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.07.2026 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம், ஆனி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# குமரன் பத்மநாதனும் சம்பிக்க ரணவக்கவும்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக தென்னிலங்கையில் அணிதிரட்டல்களைச் செய்வதற்கு எதிரணிக் கட்சிகள் முக்கியமாக இனவாதத்தையே நம்பியிருக் கின்றன போன்று தெரிகிறது.

முன்னாள் படையதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படும்போது எதிரணி அரசியல்வாதிகள் "விடுதலை புலிகளை அழித்து நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாத்த படை உயரதிகாரிகள் பழிவாங்கலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்" என்று குற்றஞ்சாட்டத் தொடங்கிவிடுகிறார்கள்.

விடுதலை புலிகளை தோற்கடித்த படையதிகாரிகள் குற்றங்களைச் செய்தாலும் அவர்களை தண்டிக்கக்கூடாது என்று அல்லது அத்தகைய அதிகாரிகள் குற்றங்களைச் செய்யமுடியாத புனிதர்கள் என்று இந்த அரசியல்வாதிகள் கருதுகிறார்கள் போலும்.

குருநாகலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கூட்டு எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் உரையாற்றிய ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க, "ஒற்றையாட்சியைப் பாதுகாத்த பாதுகாப்பு படைகளின் உயரதிகாரிகள் அரசாங்கத்தினால் பழிவாங்கப்படுவதற்கு எதிராக தேசியத்தை முன்னிறுத்திச் செயற்படும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் " என்று அழைப்பு விடுத்திருக்கிறார்.

அத்துடன் அவர் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட உட்பட இரா ணுவ உயரதிகாரிகள் இலக்கு வைக்கப்படுகின்ற அதேவேளை, விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பக்கபலமாக இருந்த கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை இந்த அரசாங்கம் பாதுகாக்கின்றது என்றும் குற்றஞ்சாட்டினார்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் 2009 ஒகஸ்ட் 5 ஆம் திகதி கே.பி.இலங்கை புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டார். அதற்கு பிறகு அவர் வன்னியில் வாழ்ந்து வருகிறார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்றத்துக்கு தெரிவான சம்பிக்க ரணவக்க 2007ஆம் ஆண்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் இணைந்துகொண்டார்.

கே.பி. கைது செய்யப்பட்ட வேளையில் ரணவக்க சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சராகப் பதவி வகித்தார். 2014ஆம் ஆண்டின் பிற்பகுதி வரை ரணவக்க மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்தார்.

பின்னர் 2015 ஜனவரி ஜனாதிபதி தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்காக அவர் அந்த அரசாங்கத்தில் இருந்து வெளியேறினார்.

மலேசியாவில் கைதான கே.பி.யை இலங்கைக்கு கூட்டிவந்து வன்னியில் சுதந்திரமாக வாழ அனுமதித்த அரசாங்கத்தில் அமைச்சராக பதவியில் இருந்த போது ஏன் ரணவக்க அதைப் பற்றி கேள்வி கேட்கவில்லை, எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை?

கே.பி. இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பிறகு நான்கு வருடங்களுக்கும் அதிகமான காலமாக மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் ரணவக்க தொடர்ந்து அமைச்சராக பதவியையும் சலுகைகளையும் அனுபவித்தபோது கே.பி. யைப் பற்றி எதுவும் பேசவில்லை. அந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளை முழுமையாக ஆதரித்தார்.

இப்போது ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கே.பி.யை பாதுகாப்பதாக பேசி இனவாதத்தை தூண்டுகிறார் இந்த ரணவக்க.

# வன்முறையின் கைதிகள்




கடந்த திங்களன்று கொழும்புக்கு வெளியே நெரிசல் நிறைந்த நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கட்டுக்கடங்காத திடீர் வன்முறையில் 28 பேர் கொல்லப்பட்டமை, தவறான நிர்வாகத்தையும் அதிகாரிகளின் அலட்சியப் போக்கையுமே காட்டுகிறது.

சிறை வளாகத்திற்குள் பதற்ற நிலை நிலவுவது குறித்த தகவல்கள் ஞாயிற்றுக்கிழமையே வெளிவரத் தொடங்கின. ஆரம்பத்தில் இரண்டு கைதிகள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அதிகாரிகள் உடனடியாக சிறையைச் சுற்றி இராணுவத்தினரை நிலைநிறுத்தினர், இருப்பினும் திங்களன்று வன்முறை தீவிரமடைந்தது. இதில் 24 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன், 100-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சிறை வளாகத்திற்குள் சட்டவிரோத போதைப்பொருள் நடமாட்டம் இருப்பதாக ஒரு குழு கைதிகள் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்தே திங்கள்கிழமை கலவரம் வெடித்தது. சிறைக் காவலர்கள் வன்முறையைக் கட்டுப்படுத்த போராடிக் கொண்டிருந்த போதே, சில கைதிகள் காவலர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்துக் கொண்டனர், மற்றவர்கள் தடிகளாலும் கற்களாலும் எதிர்த்தரப்பு கும்பலைச் சேர்ந்த கைதிகளைத் தாக்கினர். உயிரிழந்தவர்களில் எட்டு சிறைக் காவலர்களும் அடங்குவர்.

எஞ்சியிருந்த நூற்றுக்கணக்கான கைதிகளை அதிகாரிகள் வேறு சிறைகளுக்கு மாற்றியுள்ளனர். இலங்கையின் மிக மோசமான சிறைக் கலவரங்களில் ஒன்றான இந்தச் சம்பவம், அநுர குமார திசநாயக்க அரசாங்கம் எதிர்கொள்ளும் இரண்டு முக்கிய சவால்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது - முதலாவது, ஒழிக்கப்பட வேண்டும் என அவர்கள் தீர்மானித்துள்ள போதைப்பொருள் அச்சுறுத்தல், இரண்டாவது, மனித உரிமைப் பாதுகாவலர்களால் பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டு வரும் சிறைச்சாலைகளின் கடுமையான அதிக நெரிசல் ஆகும்.

2020 ஆம் ஆண்டில், இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு, சிறைகளில் நிலவும் அதிக நெரிசல் மற்றும் போதிய வளங்கள் இல்லாமை ஆகியவற்றின் காரணமாக சிறை நிலைமைகள் மிகவும் மோசமாக இருப்பதாகக் கண்டறிந்தது.

2024 ஆம் ஆண்டின் கணக்காயவாளர. நாயகத்தின் அறிக்கையின்படி, டிசெம்பர் 31, 2024 நிலவரப்படி, நாட்டின் சிறைச்சாலைகளில் அனுமதிக்கப்பட்ட கொள்ளளவான 10,395 கைதிகளுக்குப் பதிலாக 28,278 கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர், இது அதன் உண்மையான கொள்ளளவை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகும்.

இந்த கலவரத்திற்கான உடனடித் தூண்டுதல் போதைப்பொருள் பாதாள உலகத்துடன் தொடர்புடையது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர், இதனை ஒடுக்கவே திசநாயக்க அரசாங்கம் முயன்று வருகிறது.

2024 ஆம் ஆண்டின் கணக்காயவாளர. நாயகத்தின் அறிக்கையின்படி, டிசெம்பர் 31, 2024 நிலவரப்படி, நாட்டின் சிறைச்சாலைக ளில் அனுமதிக்கப்பட்ட கொள்ளளவான 10,395 கைதிகளுக்குப் பதிலாக 28,278 கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர், இது அதன் உண்மையான கொள்ளளவை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகும்.

தாக்குதல் நடத்தியவர்களின் நோக்கம் அல்லது அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் எதுவாக இருந்தாலும், அரசின் பாதுகாப்பில் உள்ளவர்கள் உயிரிழப்பது "ஆழ்ந்த அதிர்ச்சியளிக்கிறது" என்றும், இதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மிகச் சரியாகக் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து முறையான விசாரணை நடத்துவதற்காக, ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழுவை அமைச்சரவை நியமித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் துரித நடவடிக்கையும், இக்கொடிய சம்பவத்திற்கான காரணங்களை ஆராய்வதற்கான அவர்களின் விருப்பமும் வரவேற்கத்தக்கதும் அவசியமானதும் ஆகும்.

27 கைதிகள் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2012 வெலிக்கடை சிறைக் கலவரம், மற்றும் 11 பேரின் உயிரைப் பறித்த கொழும்புக்கு அருகிலுள்ள 2020 மஹர சிறைக் கலவரத்திற்குப் பிறகு நடக்கும் மூன்றாவது பெரிய சம்பவம் இதுவாகும். இந்த விசாரணையின் வேகமும் அரசாங்கத்தின் அணுகுமுறையும், நாட்டின் சிறைச்சாலைகள் தொடர்பாக நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கவலைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான அவர்களின் உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்தும்.

மேலும் மோதல்கள் ஏற்படுவதைத் தடுக்க, சிறை நிலைமைகள், வாழ்க்கை முறை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கி அரசாங்கம்

செயற்பட் வேண்டும். அதேவேளை, சிறைகளுக்குள்ளும், ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் கடுமையான அச்சுறுத்தலாக விளங்கும் போதைப்பொருள் வலையமைப்புகளை முடக்குவதற்கான முயற்சிகளில் அதிகாரிகள் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட வேண்டும்.

(தி இந்து ஆசிரிய தலையங்கம் 9, ஜூலை 2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் நினைத்தை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் டென்ஷன் ஆவீர்கள். தன்வேலையுண்டுஎன்றிருக்க வேண்டும்.

**கடகம்**
குடும்பத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாக பழகுங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**கன்னி**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள்.

**துலாம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் கிடைக்கும். உத்தியோகத்தில் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் புதுமைகளைச் செய்வீர்கள். அமோகமான நாள்.

**கும்பம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மீனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

# வவுனியா சாலை இ.போ.ச. பஸ் சேவை முடக்கம்!



வவுனியா, ஜுலை. 14

வவுனியா சாலையின் இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் நேற்று காலை முதல் பஸ் சேவைகளை முன்னெடுக்க முடியாது நிலை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் சாலையின் பொறியியல் பகுதியில் பணிபுரியும் ஊழியர்கள் கடைமைக்கு சமூகம் தராமையே நேற்று பஸ் சேவைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது.

மேலதிக நேரக்கொடுப்பனவு விடயத்தில் ஏற்பட்டுள்ள பிரச்னையால் பொறியில் பிரிவு ஊழியர்கள் நேற்று முன் தினம் சமூகம் தரவில்லை எனக் கூறப்படுகின்றது.

நேற்று திங்கள்கிழமை என்பதால் பஸ் சேவைகள் இன்மையால் மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் அரச ஊழியர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர். (அ)

# திருவள்ளுவர் திருக்கோயில் கிளிநொச்சியில் திறந்துவைப்பு

கிளிநொச்சி, ஜுலை. 14

கிளிநொச்சியில் அமைந்துள்ள அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன் கலைக்கோயில் வளாகத்தில், திருவள்ளுவர் திருக்கோயில் திறப்பு விழா நேற்று முன் தினம் சிறப்பாக நடைபெற்றது.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், தமிழ்நாட்டின் வி.ஜி.பி.குழுமத்தைச் சேர்ந்தவரும் திருவள்ளுவர் சிலையை அன்பளிப்பாக வழங்கியவருமான கலைமாமணி டாக்டர் வி.ஜி. சந்தோசம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மேலும், தமிழ்நாடு கோவிலூர் வேதாந்த மடத்தின் குரு முதல்வர் சீர்வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள், பம்பாய் திருக்குறள் தேனீ வி.மகாலிங்கம் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களும் நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் ஓய்வுநிலைப் பேராசிரியர்கள், அகில இலங்கை கம்பன் கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு, திருவள்ளுவரின் அறநெறிகளையும் தமிழ் பண்பாட்டு மரபையும் போற்றும் வகையில் இடம்பெற்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை சிறப்பித்திருந்தனர். (அ)

# கலாசாலையில் ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜுலை. 14

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடத்தும் ஆடிப்பிறப்பு விழா எதிர்வரும் வெள்ளி காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி செல்வ ரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (அ)

# டெங்கு பரவும் வேகம் அதிகரிப்பு 68 ஆயிரத்தை கடந்த நோயாளர்கள்

கொழும்பு, ஜுலை. 14

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் வரையான காலப்பகுதியில் நாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 68,672 ஆகப் பதிவாகியுள்ளதாகவும் அப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும், கடந்த 11 ஆம் திகதி ஒட்டுமொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 68,071 ஆகப் பதிவாகியிருந்த நிலையில், நேற்று முன்தினம் அந்த எண்ணிக்கை 601 இனால் அதிகரித்துள்ளது.

இதில் அதிகளவான நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 36,118 ஆகப் பதிவாகியுள்ளது.

அத்துடன், மேல் மாகாணத்தில் அதிகளவான நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 14,112 ஆகக் காணப்படுகிறது.

அதேபோன்று, கொழும்பு மாவட்டத்தில் 13,791 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, ஜுலை மாதத்தின் கடந்த 12 நாட்களில் 13,293 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் அதிகளவான நோயாளர்கள் ஜூன் மாதத்திலேயே பதிவாகியுள்ளதுடன், அந்த எண்ணிக்கை 21,538 ஆகும்.

டெங்கு நோய் காரணமாக இந்த ஆண்டு மாத்திரம் 47 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

# அமிர்தலிங்கத்தின் 37 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று பண்ணாகத்தில்



யாழ்ப்பாணம், ஜுலை. 14

இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் முன்னாள் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 37 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ்.பண்ணாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவு தினம் நேற்றுக் காலை வலி.மேற்கு பிரதேச சபைக்கு முன்பாகவுள்ள அவரின் உருவச் சிலையடியில் நடைபெற்றது.

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வின்போது அவரது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், பண்ணாகம் கிராம மக்கள் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திறைசேரி மின்னஞ்சல் கட்டமைப்பு 2019 முதல் காலாவதியான நிலையில்!

## கணினி அவசரநிலை பதிலளிப்பு குழு தகவல்

கொழும்பு, ஜூலை. 14

திறைசேரியின் மின்னஞ்சல் கட்டமைப்பு 2019 ஆம் ஆண்டு முதல் காலாவதியான நிலையில் இருப்பதாக, இலங்கை கணினி அவசரநிலை பதிலளிப்பு குழு, அரசாங்க நிதி பற்றிய குழுவில் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுக் கடன் தவணையாகச் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள், வேறொரு தரப்பினரின் கைக்குச் சென்ற சம்பவம் குறித்து ஆராயும் போதே இந்தக் கருத்து வெளியிடப்பட்டது.

குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா மற்றும் திறைசேரியின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோர் குறித்த கூட்டத்தில் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர்.

திறைசேரியின் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மூன்றாம் தரப்புக்குச் சென்ற இந்தச் சம்பவம், இணையக் குற்றத்துடன் தொடர்புடைய மோசடி என அரசாங்க நிதி பற்றிய குழு உறுதி செய்துள்ளது.

இது குறித்த விரிவான அறிக்கையை குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையில் குறித்த மோசடி தொடர்பான கண்டறிதல்கள் மட்டுமன்றி, எதிர்காலத்திற்கான முக்கிய பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. (அ)

# இலங்கையின் மிக மூத்த பெண் 114 ஆவது வயதில் காலமானார்!



கொழும்பு, ஜூலை. 14

இலங்கையின் மிக மூத்த வயதுடைய பெண்களில் ஒருவராகப் பரவலாக அறியப்பட்ட, அநுராதபுரத்தைச் சேர்ந்த பஞ்சகே கலுமெனிக்கே தனது 114 ஆவது வயதில் காலமானார்.

1912 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் திகதி பிறந்த கலுமெனிக்கே, இந்த மாத முற்பகுதியில் தனது 114 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

அதன் பின்னர் சிறிது காலத்திலேயே, அவர் கீழே விழுந்ததில் காயமடைந்து அநுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

அநுவை சிகிச்சைக்குப் பின்னர் உயிர்வாழ்ந்த போதிலும், இறுதியில் அவர் காலமானார்.

12 பிள்ளைகள் மற்றும் 325 கொள்ளுப் பேரக்குழந்தைகள் என ஒரு மிகப்பெரிய குடும்பப் பரம்பரையை கலுமெனிக்கே விட்டுச் சென்றுள்ளார். (அ)

# தமிழக தேர்தலில் வாக்களித்த இலங்கைத் தம்பதியர் கைது!

சென்னை, ஜூலை. 14

சென்னையில் முறையான குடியுரிமை ஆவணங்கள் இன்றி, போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வாக்காளர் அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்ட இலங்கைத் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆண் ஒருவரும் (வயது-69) அவரது மனைவியும், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சென்னை, தியாகராஜநகர் பகுதியில் வசித்து வருகின்றனர்.

இவர்கள் இருவரும் இந்தியக் குடியுரிமைச் சான்றிதழ்கள் இன்றி, போலியான முகவரி ஆதாரங்களைக் காட்டி வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களைச் சேர்த்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அண்மையில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலின் போது இவர்கள் வாக்களித்ததைக் கண்டுபிடித்த அதிகாரிகள், இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையின் முடிவில், இவர்கள் முறையான ஆவணங்கள் இன்றி வாக்காளர் அடையாள அட்டையைப் பெற்று, தேர்தலிலும் வாக்களித்தமை உறுதியானது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் இவர்கள் இருவரும் இலங்கை செல்வதற்காக, சென்னை விமான நிலையம் சென்றபோது கைதாகியுள்ளனர். (அ)

# களுத்துறை மாவட்ட செயலகத்தில் தீ!

கொழும்பு, ஜூலை. 14

களுத்துறை மாவட்ட செயலகத்தின் தரைத்தளத்தில் உள்ள மின் அமைப்பில் நேற்றுக் காலை சுமார் 8:30 மணியளவில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால் அங்குள்ள உபகரணங்கள் சேதமடைந்தன.

எனினும், இச்சம்பவத்தினால் உயிரிழப்புகளோ அல்லது காயங்களோ எதுவும் ஏற்படவில்லை.

களுத்துறை மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்குத் தீயணைப்பு வாகனங்களை அனுப்பி, தீயை வெற்றிகரமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதற்கிடையில், இச்சம்பவத்தைத் தொடர்ந்து களுத்துறை மாவட்ட செயலகத்திற்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பிரான்ஸ் பயணத்தை இரத்து செய்தார் அநுர!

கொழும்பு, ஜூலை. 14

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தின் தாக்கம் உள்ளிட்ட நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை கருத்தில் கொண்டு இம்மாத இறுதியில் பிரான்ஸிற்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவிருந்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, தனது விஜயத்தை இவ்வருட இறுதி வரை ஒத்திவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பிரான்ஸ் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வருடத்தின் பிற்பகுதியில் புதிய திகதியொன்றை வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் புதுடில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தாக்கங்கள் குறித்த உச்சி மாநாட்டின் போது, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் சந்தித்த போதே இந்த பிரான்ஸ் விஜயத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வசதியை நீடிப்பதற்காக பிரான்ஸின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலே திட்டமிடப்பட்டிருந்தது. தற்போதைய சலுகை டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைவதால், இலங்கை அடுத்த ஆண்டில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைகளுக்காக புதிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வசதியானது தகுதிபெறும் வளரும் நாடுகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்குள் பிரவேசிப்பதற்கு முன்னுரிமை வழங்குகிறது. எனினும், அதன் தொடர்ச்சியானது மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய 27 சர்வதேச உடன்படிக்கைகளை திறம்பட செயல்படுத்துவதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது பொருளாதாரம் மற்றும் நிதி மற்றும் பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பு தொடர்பான மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் பிரான்ஸுடன் கையெழுத்திட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

"விஜயத்திற்கு முன்னர், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை இறுதி செய்ய நாங்கள் விரும்புகிறோம்," என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியுடன் செல்லும் தூதுக்குழுவில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் நிதியமைச்சின் பிரதி அமைச்சர் ஆகியோர் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுகாதாரப் பணி உதவியாளர் ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்யவேண்டும்

## திருகோணமலையில் நேற்று ஆர்ப்பாட்டம்



திருமலை, ஜுலை. 14

சுகாதாரப் பணி உதவியாளர் ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்யக் கோரி நேற்று திருகோணமலை மாகாண சுகாதார அமைச்சுக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "நியாயமான ஆட்சேர்ப்பு வேண்டும்", "அநுர ஆட்சியில் அநீதியா?" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மத்திய அரசாங்க சுகாதார அமைச்சினால் குறித்த சுகாதாரப் பணி உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த நிலையில், ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் காணப்படுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், அரசியல் தலையீடுகள் இன்றி தகுதியானவர்களுக்கு நியாயமான முறையில் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (அ)

# ஓய்வு பெற்ற அதிபர், பல்கலை மாணவன் போதைப்பொருளுடன் அதிரடியாக கைது!

கொழும்பு, ஜுலை. 14

கம்பஹா மாவட்டம், திவுலப்பிட்டிய பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன், ஓய்வு பெற்ற அதிபர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திவுலப்பிட்டிய பகுதியில் உள்ள தனது உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த போதே, மேற்படி நபர் பொலிஸாரின் சுற்றிவளைப்பில் சிக்கியுள்ளார். அவரிடமிருந்து 175 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய ஓய்வுபெற்ற அதிபர் ஆவார். இவர் நீண்ட காலமாக கல்வித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கம்பஹா - கந்தானை பிரதேசத்தில் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தானை பகுதியில் உள்ள வாடகை வீடு ஒன்றில் தங்கியிருந்த வேளையே, மேற்படி மாணவன் பொலிஸாரால் சுற்றிவளைத்துக் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரிடமிருந்து 25 கிராம் ஹெரோயின் போதைப்பொருளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் மொனராகலை, மதுள்ளை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபராவார். இவர் பல்கலைக்கழகம் ஒன்றில் கலைப்பிரிவில் கல்வி பயிலும் மாணவன் என்பது முதற்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிராஜ் வீதியை புனரமைக்க கோரி மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்!



அம்பாறை, ஜுலை. 14

கோறளைப்பற்று பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட சிராஜ் வீதியை புனரமைத்து தருமாறு கோரி பிரதேச மக்கள் நேற்று முன் தினம் காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்ட காலமாக குறித்த வீதி புனரமைக்கப்படாமல் மணல் வீதியாக காணப்படுவதால், அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக குறித்த வீதியை பயன்படுத்தும் வாகன சாரதிகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்து சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இது தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் தவிசாளரிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ)

# மனநல நோயாளிகளின் பராமரிப்பை வலுப்படுத்த கல்முனை பிராந்திய தாதியர்களுக்கு விசேட பயிற்சி



அம்பாறை, ஜுலை. 14

மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட நபர்களை ஆரம்ப நிலையிலேயே அடையாளம் கண்டு, அவர்களுக்கு உரிய சிகிச்சை மற்றும் தொடர்ச்சியான பராமரிப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், கல்முனை பிராந்திய தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் பொது சுகாதார தாதிய சகோதரிகளுக்கான விசேட பயிற்சி செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் பேரில், பிராந்திய உளநலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி என். அருந்திரன் இந்த செயலமர்வை ஒருங்கிணைத்தார்.

இந்நிகழ்வில் உளநல வைத்திய நிபுணர்களான வீ. சிந்துஜன் மற்றும் எம்.ஜே. நௌபல் ஆகியோர் வளவாளர்களாகப் பங்கேற்று, மனநல மருத்துவத்தில் பின்பற்றப்படும் நவீன சிகிச்சை அணுகுமுறைகள், சமூக மட்டத்தில் தாதியர்களின் பொறுப்புகள் மற்றும் நோயாளிகளுக்கான ஒருங்கிணைந்த பராமரிப்பு முறைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தனர்.

பயிற்சி அமர்வில், மனநலப் பாதிப்புக்குள்ளான நபர்களை சமூக மட்டத்தில் ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் வழிமுறைகள், உளவியல் மற்றும் மருந்தியல் அடிப்படையிலான சிகிச்சை மற்றும் பராமரிப்பு நடைமுறைகள், மேலதிக சிகிச்சைக்காக நோயாளிகளை உரிய நிலையங்களுக்கு பரிந்துரைக்கும் நடைமுறைகள், சிகிச்சை பெறும் நோயாளிகளின் முன்னேற்றத்தை தொடர்ச்சியாகக் கண்காணித்தல் மற்றும் மருந்துகளை முறையாகப் பயன்படுத்துவதன் அவசியம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. (அ)

# ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட விசேட அதிரடிப்படை சிப்பாய்!

## மணல் கடத்தல் குழுவை பிடிக்க சென்றபோது விபரீதம்

திருமலை, ஜுலை. 14

திருகோணமலை - சேருநுவர, சூரியபுர விசேட அதிரடிப்படை முகாமில் கடமையாற்றி வந்த விசேட அதிரடிப்படை வீரர் ஒருவர், ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு மாயமான அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

அவரைத் தேடும் பணிகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை வேளையில், கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்கை முடக்குச் செட்டி பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக விசேட அதிரடிப்படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, மணல் கடத்தலில் ஈடுபடும் குழுவினரை மடக்கிப் பிடிப்பதற்காக சூரியபுர விசேட அதிரடிப்படை முகாமில் இருந்து விசேட குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

இதன்போது, கங்கை ஆற்றைக் கடந்து செல்ல முற்பட்ட வேளையிலேயே இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது.

இவ்வனர்த்தத்தில் சிக்கி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனவர் சூரியபுர விசேட அதிரடிப்படை முகாமில் பணிபுரியும் 41 வயதுடைய கங்குவலப் பிரதேசத்தை சேர்ந்த சார்ஜன்ட் திஹான் என்ற பொலிஸ் அதிகாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஆற்றின் நீர் ஓட்டம் காரணமாக அவர் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில், அவரை மீட்பதற்காக கடற்படையினர் வரவழைக்கப்பட்டு தற்போது தீவிர தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# அம்பாறை அறுகம்பை உல்லை கடற்கரைக்கு ஆயிரக்கணக்கில் குவியும் உல்லாச பயணிகள்!

அம்பாறை, ஜுலை. 14

அம்பாறை பொத்துவில் அறுகம்பை உல்லை கடற்கரைக்கு ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர்.

உலகப்புகழ் பெற்றதும், இயற்கையானதும், கடல் விளையாட்டிற்கு பொருத்தமானதும், பாதுகாப்பானதுமான கடற்கரையாக உல்லைப் பிரதேசம் அமைந்துள்ளது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் நீர்ச் சறுக்கு போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றனர். சுற்றுலாப்பயணிகளின் வருகையால் ஹோட்டல்கள் யாவும் நிரம்பி வழிகின்றன. சுற்றுலாத்துறையை நம்பியுள்ள தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (அ)




# மூதூர் பொது சந்தையில் நேற்று சுகாதார அதிகாரிகள் சோதனை

திருமலை, ஜுலை. 14

திருகோணமலை - மூதூர் சந்தையில் காணப்பட்ட மனித பாவனைக்கு உகந்ததல்லாத மரக்கறி வகைகள் கைப்பற்றப்பட்டு இன்று காலை அழிக்கப்பட்டதாக மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி என். எம்.ஹஸ்ஸாலி தெரிவித்தார்.

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி என்.எம். ஹஸ்ஸாலி தலைமையிலான பொதுச்சுகாதார பரிசோதகர் மூதூர் வாராந்த சந்தையை சோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது மனித பாவனைக்கு உகந்ததல்லாத 500 கிலோ நிறை கொண்ட உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட மரக்கறி வகைகள் கைப்பற்றப்பட்டதோடு, காலாவதியான நூடில்ஸ் பொதியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேவேளை, குறித்த வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நீதியரசர்கள் வயதெல்லையை...

நீதிமன்றங்களின் நீதிபதிகளின் சேவைக் காலத்தை நீடிப்பதாக இருந்தால், அரசியலமைப்பின் பிரகாரம் அதனை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் நீதிமன்ற வழக்கு விசாரணைகளின் செயற்திறமை தொடர்பில் மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படும். அதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு அது வழிவகுக்கும்.

அதேநேரம் நீதியரசர்களின் வயதெல்லையை நீடிப்பதற்கு அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். என்றாலும் அரசாங்கம் இறந்த சந்தர்ப்பத்தில், மக்கள் ஆணையின் பிரகாரமே செயற்பட வேண்டும்.

நாட்டுக்குள் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள நீதித்துறையை அபிவிருத்தி செய்து, நீதிமன்ற கட்டமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனால் எதனை செய்வதாக இருந்தாலும் மக்களின் இறையாண்மை முக்கியமாகும். இது தொடர்பில் ஏனைய அமைப்புகளின் கருத்துக்களுக்கும் செவிசாய்த்து, பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு அமைய தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்.

யார் என்ன சொன்னாலும் நீதிபதிகளின் வயதெல்லையை நீடிப்பதாக இருந்தால், அதனை அரசியலமைப்பு திருத்தத்துடனே மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. அதனால் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ள மக்களின் ஆணை முக்கியமாகும். அதனால் பெரும்பான்மை மக்களின் ஆணையுடனே இதனை மேற்கொள்ளும் போது, யாருக்கும் பிரச்னை ஏற்படப்போவதில்லை.

அதேநேரம் சட்டத்தரணிகளின் சங்கமும் இது தொடர்பில் அவர்களின் நிலைப்பாட்டை தெரிவித்திருக்கிறது. அவர்களின் கருத்துக்களையும் அரசாங்கம் உள்வாங்கிக்கொண்டு, நிதானமாகவே இதனை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளும் போது நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ)

## தமிழ் - முஸ்லிம்...

கலந்துரையாடினர்.

இந்த முக்கிய சந்திப்பைத் தொடர்ந்து நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இக்கூட்டணியின் பிரதிநிதிகள் உத்தியோகபூர்வமாக ஒன்றிணைவை அறிவித்தனர்.

இந்த ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், தேசம் முழுவதிலும் வாழும் தமிழ் பேசும் மக்களின் ஒட்டுமொத்த நலன்களையும் உரிமைகளையும் கருத்திற்கொண்டே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்தோடு தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக நாம் அனைவரும் தற்போதைய சூழலில் ஒன்றிணைவது அவசியமானது என்றும், இந்த ஒற்றுமை எக்காரணம் கொண்டும் குலையாமல் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இன்றைய இணக்கப்பாட்டின் படி, காணி உரிமை உள்ளிட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் அனைத்து அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் ஒன்றிணைந்து தீர்வு காண்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இப்புதிய கூட்டணி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சிதைந்து போகாத ஒரு வலுவான கூட்டணியாக இருக்கும் எனவும் தலைவர்களால் நாட்டு மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அமீர் அலி, முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி., அதன் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் எம்.பி., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஜீவன் தொண்டமான் எம். பி., தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மற்றும் அதன் உபதலைவர் சுரேந்திரன் குருசாமி ஆகியோர் ஒரே மேடையில் இருந்து இந்த அறிவிப்பை நேற்று விடுத்தனர். இதனையொட்டி ஆறு கட்சிகளும் ஒன்று சேர்ந்து "தமிழ் பேசும் அரசியல் கட்சிகள் பொதுவான விடயங்களில் இணைந்து செயற்பட பொது தளத்தை உருவாக்க இணக்கம்" என்ற தலைப்பில் வெளியிட்ட கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

"இன்று சந்தித்த தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தமது சமூகங்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்னைகள் தொடர்பில் கலந்துரை யாடவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், இணக்கப்பாட்டை உருவாக்க வும் பொதுவான தளமொன்றை உருவாக்கு வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் தமது கொள்கை மற்றும் அரசியல் நிலைப்பாடு களை தனித்தனியாக பேணுவதற்கும் முன்வைப்பதற்கும் சுதந்திரம் இருப்பதை ஏற்றுக்கொண்ட பிரதிநிதிகள், பொதுவான நலன்கள் காணப்படும் விடயங்களை அடையாளம் கண்டு, சாத்தியமான சந்தர்ப்பங்களில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஒரு பொறிமுறையாக இந்த தளம் அமையும் எனத் தெரிவித்தனர். இதன்போது மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டது. புதிய அரசமைப்பு அரசு தனது தேர்தல் விஞ்ஞாபனத் தின் ஊடாக புதிய அரசமைப்பை அறி முகப்படுத்துவதாக வழங்கிய உறுதி மொழியை பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். அந்த உறுதிமொழியை நிறை வேற்றுமாறு அரசிடம் ஒருமித்த கோரிக்கை யொன்றை முன்வைக்கத் தீர்மானிக் கப்பட்டதுடன், புதிய அரசமைப்பு நீதி யும், சமத்துவமும், அர்த்தமுள்ள அதிகா ரப் பகிர்வும் உறுதி செய்யப்படும் வகை யில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வை தெரிவிக்கப்பட்டமையை அடுத்து இந்த உள்ளடக்கியதாக அமைய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. மாகாண சபைத் தேர்தல்கள் மாகாண சபைத் தேர்தல்கள் ஒரு வருட காலத்துக்குள் நடத்தப்படும் என அரசு தெரிவித்திருந்த போதிலும், தொடர்ச்சியாக இடம்பெறும் தாமதங்கள் குறித்து பிரதிநிதிகள் கவலை வெளியிட்டனர். மேலும், ஜனநாயகப் பங்கேற்பையும் பிராந்திய பிரதிநிதித்துவத்தையும் உறுதி செய்வதற்காக மாகாண சபைத் தேர்தல்களை மேலும் தாமதமின்றி நடத்துமாறு ஒருமித்த கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அனைத்து சமூகங்களையும் பாதிக்கும் காணிப் பிரச்னைகள் நாட்டின் மூன்று சமூகங்களையும் பாதிக்கும் தீவிரமான காணி தொடர் பான பிரச்சினைகள் தொடர்ந்தும் காணப்படுவதாகப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்ட னர். இந்த நீண்டகால பிரச்சினைகளுக்கு பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் அர்த்த முள்ள கலந்துரையாடல்களை முன்னெ டுத்து, நியாயமான மற்றும் நிலையான தீர்வுகளை வழங்க வேண்டியதன் அவசி யம் வலியுறுத்தப்பட்டது. இந்த பொதுத் தளத்தின் ஊடாக தொடர்ச்சியான உரையாடல்களை முன்னெடுப்பதற்கான உறுதிப்பாட்டை பிரதி நிதிகள் மீண்டும் தெரிவித்தமையுடன், இந்த விடயங்களில் பொதுவான அணுகுமுறையொன்றை உருவாக்குவது நல்லிணக்கம், ஜனநாயக ஆட்சி மற்றும் அனைத்து சமூகங்களினதும் உரிமை களை பாதுகாப்பதற்கு பங்களிக்கும் என நம்பிக்கை வெளியிட்டனர்." - என்றுள்ளது. (அ)

## அவதூறு பரப்பியவர்களின்...

தாக்கல் செய்வதற்கும் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம் மீது சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பினர் மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தனர்

என்ற குற்றச்சாட்டில் 14 எதிர் மனுதாரர்களுக்கு நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் இந்துகா சிவலிங்கம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது முதலாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் எதிர் மனுதாரர்கள் சமூக வலைத்தளங்களில் பேராசிரியர் ரகுராம் தொடர்பாக அவதூறான மற்றும் தடை செய்யப்பட்ட கூற்றுக்கள் பதிவு செய்தமையை ஏற்றுக்கொண்ட மன்று இதுவரைக்கும் அவ்வாறு போடப்பட்டிருந்த பதிவுகளை அகற்றுவதோடு, இது சம்பந்தப்பட்ட எந்த விடயத்தையும் எந்த ஒரு சமூக வலைத்தளங்களில் பதிவு செய்யக்கூடாது என இடைக்கால கட்டளையிட்டது.

இந்த நிபந்தனைக்குட்பட்ட இடைக்கால கட்டளையை, இறுதி கட்டளையாக ஆக்குவதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக, விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதோடு, ஒன்று தொடக்கம் 13 வரையான எதிர்மனுதாரர்களுக்கு இரண்டு கிழமைகளுக்குள் அழைப்பாணையை அனுப்புமாறு மன்று உத்தரவிட்டது.

எதிர்மனுதாரர்கள் அனைவருமே இரண்டு வாரங்களுக்குள் காரணங்காட்டுதல்களுக்காக மன்றுக்கு முன் ஆஜராகி தங்களுடைய சமர்ப்பணங்களை முன்வைக்குமாறும் எதிர் மனுதாரர்கள் இதனை செய்யாவிட்டால் இந்த விடயத்தில் குற்றவாளிகளாக அவர்கள் கருதப்பட்டு மன்றினால் தீர்ப்பளிக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

எதிர்மனுதாரர்கள் சமூக வலைத்தளங்களில் பதிவு செய்த கருத்துக்கள் முகத்தோற்றத்தின் அடிப்படையில அவதூறு மற்றும் தடை செய்யப்பட்ட கூற்றுக்களாக இருப்பதோடு, அது தொடர்பான விசாரணைகளுக்காகவும்

காரணங்காட்டுதலுக்காகவும் ஜூலை 27ஆம் திகதிக்கு வழக்கை மன்று திகதியிட்டது.

இதேவேளை மனுதாரருடைய சட்டத்தரணி முன்வைத்த வாதத்தில் மூன்றாவது எதிர்மனுதாரரான பெண் ஒருவர், சில நாட்களுக்கு முன் தனது சொந்த முகப்புத்தகத் தளத்தில் நீதிவான் நீதிமன்றினையும், நீதிவானையும் அவதூறு செய்யும் விதத்தில் பதிவிட்டிருந்தமையை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றார். குறித்த எதிர் மனுதாரரின் பதிவு நீதிமன்ற அவமதிப்பு என்பதுடன் நீதிவானின் இறையாண்மையை பாதிப்பதாகவும் கருதிய மன்று, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்கை பதிவு செய்ய உத்தரவிட்டார். மேலும் மனுதாரரின் சட்டத்தரணி குற்றவியல் சட்டத்தின் கீழ் பிறிதொரு வழக்கை தாக்கல் செய்ய முடியும் எனவும் அறிவுறுத்தினார். மனுதாரர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி லக்சான் டயஸ் வழிகாட்டலில் சட்டத்தரணி கனகலிங்கம் கிஷோபனா ஆஜராகி தனது வாதங்களை முன்வைத்தார். சில எதிர் மனுதாரர்கள் சார்பாக சட்டத்தரணி மகாலிங்கம் மயூரன் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். (அ)

## சாவகச்சேரி முன்னாள்...

மனு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையில், எதிர் மனுதாரர்கள் ஆட்சேபனைகளைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வழங்கி, வழக்கை, எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு, மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

கடந்த தவணையில், முறையீட்டு மனுவை ஆராய்ந்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரன், இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்க மறுத்திருந்தார். இருந்தபோதிலும், எதிர்மனுதாரர்களான வடக்கு மாகாண ஆளுநர் நா.தேவநாயகன், உள்ளூராட்சி ஆணையாளர், தனிநபர் விசாரணை அதிகாரி ஆகியோருக்கு, அறிவித்தல் அனுப்ப அனுமதியளித்திருந்தார்.

இந்த நிலையில், மனு மீதான நேற்றைய விசாரணைகளின் பின்னர், எதிர்மனுதாரர்கள் ஆட்சேபங்களை தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கி, வழக்கை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு, நீதவான் ஒத்திவைத்துள்ளார். மனுதாரர் சார்பில், சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் ஆஜராகியிருந்தார். (அ)

## பலாலி போராட்ட..

இப்போராட்டம் நடைபெறும் இடத்தில் அமர்ந்து போராட்டம் நடாத்துவதற்காக அந்த பகுதியில் கொட்டகை அமைக்க பலாலி பொலிஸாரிடம் அனுமதி கோரியிருந்தனர்.

பலாலி பொலிஸார் அனுமதிக்காத நிலையில், கடுமையான வெயிலில் இருந்து தாம் போராட்டத்தை முன்னெடுப்பதனால் பாரிய சிரமத்தை எதிர்கொள்வதாகவும், இப்போராட்டத்தில் வயோதிபர்கள், சிறுவர்கள் என பல தரப்பினர் கலந்து கொள்வதனால் வெயிலில் பாரிய களைப்பு, சோர்வு போன்ற உபாதைகளை எதிர்க்கொள்ள நேரிடுவதாக சுட்டிக்காட்டி போராட்டம் நடத்தும் இடத்தில் கொட்டகை அமைக்க அனுமதி பெற்றுத் தருமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தீர்வை பெற்றுத் தருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (அ)

## புதன் தவிர்ந்த...

பின்னர் புதன்கிழமை களிலும் வழமை போல இந்தச் சேவையை நடத்துவதற்கு தீவிர முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாக ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

ரயில்வே நிர்வாகத்தின் முன்னைய அறிவிப்பில் இந்த வாரம் முதல் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று தினங்களும் இந்த நகராந்திர சேவை நடைபெறமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது தொடர்பில் பாராளுமன்றத்திலும் வெளியிலும் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமையை அடுத்து இந்த விடயத்தில் தீவிர கவனம் செலுத்திய போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்தச் சேவையை இயன்றளவு வழமை போல் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தர விட்டார் எனத் தெரிகின்றது. இதனையடுத்து உடனடியாக நடை முறைக்கு வரும் விதத்தில் இந்தச் சேவையை புதன்கிழமை தவிர்ந்த ஆறு நாள்களும் நடத்துவதற்கு இப்போது தீர்மானிக்கப்பட்டு, அதற்கான உத்தரவுகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அடுத்த மாதத்தில் நல்லூர் உற்சவ காலம் வருவதையொட்டி புதன்கிழமை சேவையையும் வரும் 20 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிப்பதற்கு முழு அளவில் முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

காலையில் கல்கிஸையில் இருந்து புறப்பட்டு கொழும்பு கோட்டை வழியாக யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறைக் குச் செல்லும் இந்த நகராந்திர கடுகதி சேவை மதியம் காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்டு முன்னிரவில் கல்கிஸையைத் திரும்பிச் சென்றடையும். இதுவரை காலமும் தினசரி நடைபெற்ற இந்தச் சேவை இப்போதைய புதிய ஒழுங் கின்படி புதன்கிழமை மாத்திரம் நடை பெறாது. புதன்கிழமை சேவையும் விரைவில் மீள நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என நம்பப்படுகின்றது. (அ)

## பிள்ளையானின்...

இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று அழைக்கப்பட்ட போதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் இணையவழி தொழிநுட்பத்தின் ஊடாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் ரி-56 ரக துப்பாக்கிகளால் ஐந்து நபர்கள் சுட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத் தொடர் தொடர்பாக, சிவநேசத்துரை சந்திரகாந்தன் உள்ளிட்ட இரு சந்தேக நபர்களுக்கு எதிராகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## எச்.ஐ.வி...

பெண்களை விட இந்த தொற்றால் அதிகமாக ஆண்களே பாதிக்கப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற பாலியல் பழக்கவழக்கங்களே எச்.ஐ.வி பரவுவதற்கான முக்கிய வழியாக உள்ளது என்றும், போதைப்பொருள் பயன்படுத்துவோர் ஊசிகள், சிரிஞ்சுகள் மற்றும் பிற ஊசி உபகரணங்களைப் பகிர்ந்துகொள்வதும் இந்த வைரஸ் பரவுவதற்குக் காரணமாகிறது என்றும் ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

எச்.ஐ.வி-யை முழுமையாகக் குணப்படுத்த முடியாது நோயாகவே பார்க்கப்படுகிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்நாள் முழுவதும் சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்படும்.

அத்துடன், எச்.ஐ.வி, பாலியல் ரீதியாகப் பரவும் நோய்த் தொற்றுகள் மற்றும் ஹெபடைடிஸ் ஆகியவற்றைக் கண்டறிவதை மேம்படுத்துவதற்காக, தேசிய பாலியல் நோய்கள் / எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் கொழும்பு மற்றும் கம்பஹாவில் ஒரு சிறப்பு நடமாடும் மருத்துவமனைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனவரியில் தொடங்கப்பட்ட இந்த முன்னோடித் திட்டத்தின் மூலம், இலவச மற்றும் இரகசியமான பரிசோதனை, ஆலோசனை மற்றும் சிகிச்சை சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

பல நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் எச்.ஐ.வி பாதிப்பு விகிதம் ஒப்பீட்டளவில் குறைவாகவே பதிவாகி வந்தாலும், புதிதாகப் பதிவாகும் நோயாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றனர்.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டு முதல் எச்.ஐ.வி பாதிப்புகள் படிப்படியாக அதிகரித்து இந்த ஆண்டின் புள்ளிவிவரங்கள் கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளது.

குறிப்பாக, கொழும்பு மற்றும் கம்பஹாவில் அதிக மக்கள் தொகை இருப்பதால், அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ளார். (அ)

## வடக்கு, கிழக்கில்...

கட்டத்திலேயே, கைவிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள இந்த வீடமைப்புத் திட்டங்களை விரைவாகப் பூர்த்தி செய்து, பயனாளிகளுக்கு நிரந்தர வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், குறித்த வீடுகளின் உரிமையாளர்கள் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்படுவதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிலையில், 2027 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் வீடமைப்புத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகப் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார். அதற்கமைய, ஏற்கனவே இடைநிறுத்தப்பட்டுள்ள ஆறாயிரம் வீடுகளில், மூவாயிரம் வீடுகளுக்கான நிர்மாணப்பணிகளை, அடுத்த வருடத்தின் இறுதிக்குள் முழுமையாக நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்களில் சுமார் 13 ஆயிரம் குடும்பங்களுக்கான வீட்டுத் தேவை உள்ளதாக ஏற்கனவே அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இந்தநிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் வீட்டுத் தேவைக்கான உண்மையான இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளை மாவட்ட செயலாளர்களிடம் கோரியுள்ளதாகவும் பிரதி அமைச்சர் கூறினார். மாவட்ட செயலாளர்களிடமிருந்து கிடைக்கும் தரவுகளுக்கு அமைய, வீடமைப்புத் திட்டங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வீடமைப்பு, நிர்மாண மற்றும் நீர்வழங்கல் பிரதி அமைச்சர் டி.பி. சரத் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## இளம் வயதினர்...

களுதந்திரி வீரதுங்க தெரிவித்துள்ளார்.

உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது குறைந்து வரும் கருத்தரிப்பு விகிதம், மக்கள் தொகையின் முதுமை, இளைஞர்களின் அதிகப்படியான புலம்பெயர்வு மற்றும் மாறிவரும் குடும்ப அமைப்பு போன்ற குறிப்பிடத்தக்க மக்கள் தொகை மாற்றங்களுக்கு உள்ளாகி வருவதாகப் பேராசிரியர் மனோரி களுதந்திரி வீரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இளம் தலைமுறையினர் தற்போது மிக வேகமாக மாறிவரும் சமூக மற்றும் பொருளாதாரச் சூழலில் வாழ்ந்து வருகின்றனர்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள், வேலைவாய்ப்பின்மை மற்றும் தொழில் ரீதியான நிச்சயமற்ற தன்மை, மலிவு விலையில் வீட்டு வசதி கிடைப்பதில் உள்ள சிரமங்கள், தொழில் வளர்ச்சியில் உள்ள கடும் போட்டி ஆகிய காரணங்கள், திருமணம் மற்றும் குடும்பத்தை உருவாக்குவது குறித்து அவர்களின் முடிவுகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே, இளைஞர்களுக்கு உதவும் வகையில் தரமான கல்வி மற்றும் கண்ணியமான வேலைவாய்ப்புகளை உறுதி செய்தல்,

மலிவு விலையில் வீட்டு வசதி மற்றும் தரமான சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், குடும்பத்திற்கு ஏற்ற அலுவலகச் சூழலை உருவாக்குதல் ஆகிய கொள்கை மாற்றங்களை முன்னெடுக்க வேண்டும் என அவர் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# நீதி அமைச்சர் பதவி விலகி மன்னிப்பு கோரவேண்டும்!

## அஜித் மான்னப்பெரும வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 14

நீர்கொழும்பு சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்குத் தார்மீகப் பொறுப்பேற்று, நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்றும், நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும வலியுறுத்தினார்.

கம்பஹாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் சம்பவத்தில் 8 சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் 21 கைதிகள் என மொத்தம் 29 பேர் உயிரிழந்துள்ளமை துரதிர்ஷ்டவசமானது என்று குறிப்பிட்ட அவர், "மோதல் இடம்பெற்ற முதல் நாளிலேயே இரண்டு கைதிகள் மட்டுமே உயிரிழந்திருந்தனர். அன்று சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அங்கிருந்து அகற்றியிருந்தால், நிலைமை இவ்வளவு தூரம் மோசமடைந்திருக்காது. எமது சிறைச்சாலை அதிகாரிகள் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள்" என்றும் தெரிவித்தார்.

விடயத்துக்குப் பொறுப்பான நீதி அமைச்சர், இந்தச் சம்பவம் குறித்து ஆரம்பத்தில் எந்தத் தகவலும் இன்றி இருந்தார் என்றும், சமூக வலைத்தளங்களைப் பார்த்து தகவல்களை அறிந்து கொள்வது போன்றே ஊடகங்களுக்குப் பதிலளித்தார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

"பொறுப்புவாய்ந்த அமைச்சரிடமிருந்து இவ்வாறான பொறுப்பற்ற பதில்களை எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர் சரியாகச் செயற்பட்டிருந்தால் இந்தத் துயரத்தைத் தடுத்திருக்கலாம்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அரசு எடுத்த தீர்மானத்தை வரவேற்ற அஜித் மான்னப்பெரும, அதேநேரம் உயிரிழந்த கைதிகளின் விடயத்திலும் அரசு கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (அ)

# விமல் வீரவன்ஸவுக்கு எதிரான வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூலை. 14

2016 ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்துக்கு முன்பாக வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் மூலம் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 6 சந்தேகநபர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் மேலதிக விசாரணையை செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி அழைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டது.

இதன்போது பிரதிவாதியான முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, விமல் வீரவன்ஸ உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பான மருத்துவ அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

அதற்கமைய, முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்த பிரதம நீதவான், இந்த வழக்கின் விசாரணையை செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்கு அழைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

# நெல் வழங்கவுள்ள விவசாயிகள் பதிவுகளை மேற்கொள்ளமுடியும்

கிளிநொச்சி, ஜூலை. 14

வடக்கு மாகாணத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல்லை வழங்கவுள்ள விவசாயிகள், தமக்கு அருகிலுள்ள களஞ்சியசாலைக்கு சென்று விண்ணப்ப படிவங்களைப் பெற்று, கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபார்சுடன், நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்க முடியும் என வடக்கு மாகாண நெல் சந்தைப்படுத்தல் சபையின் பதில் முகாமையாளர் தவராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் ஊடக சந்திப்பை நடத்திய வேளை அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# ஊழல், மோசடிகளை நியாயப்படுத்தாதீர்!



## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஜூலை. 14

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு, அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை அடியோடு மறுத்துள்ள அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படுவது அரசியல் பழிவாங்கல் அல்ல, மாறாக சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் பணிகளே என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் இடம்பெற்ற பாரிய ஊழல், மோசடிகள் தொடர்பில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம், சுயாதீன விசாரணை நிறுவனங்களின் ஊடாகவே சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் எவ்வித அரசியல் உள்நோக்கமோ அல்லது பழிவாங்கும் நோக்கோ கிடையாது.

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திச் சட்டத்திலிருந்து தப்பிக்கும் காலம் முடிவுக்கு வந்துவிட்டது. குற்றங்கள் புரிந்தவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் சட்டத்தின் முன் பதில் கூற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஊழல், மோசடி தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள், கடந்த காலங்களைப் போலன்றி மிகவும் வெளிப்படையாகவும் சுயாதீனமாகவும் செயற்படுகின்றன. இதில் எந்தத் தரப்புக்கும் சார்பாகச் செயற்படும் தேவை அரசுக்கு இல்லை.

தங்கள் மீதான சட்ட நடவடிக்கைகளைத் தற்காத்துக் கொள்ள எதிர்க்கட்சிகள் அரசின் மீது "அரசியல் பழிவாங்கல்" என்ற முத்திரையை குத்த முயற்சிக்கின்றன. பேச்சு சுதந்திரம் என்ற பெயரில் ஊழல்களை நியாயப்படுத்த எவருக்கும் உரிமையில்லை. அரசு மக்களின் பணத்தைப் பாதுகாப்பதிலும், ஜனநாயக விழுமியங்களைக் காப்பதிலும் உறுதியாக உள்ளது - என்றார். (அ)



# வரலாற்றில் என்றுமில்லாதவாறு பலவீனமடைந்துள்ள நீதித்துறை!

## திலித் ஜயவீர எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 14

இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையானது வரலாற்றில் என்றுமில்லாதவாறு பலவீனமடைந்து, சீர்குலைந்துள்ளது என்று சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

சர்வஜன அதிகாரம் கட்சியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளர் உதார ஜயவீரவின் மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கவலையை வெளியிட்டார்.

"நீதித்துறையின் சுயாதீனத்தன்மை சீர்குலைந்து போயுள்ளது. இது குறித்து நீதித்துறையில் பணியாற்றும் சட்டத்தரணிகளும், நேர்மையான நீதிபதிகளும் கொண்டுள்ள கருத்து மிகவும் தெளிவானது. அதேபோல், சட்டம் ஒழுங்கு, பொலிஸ் துறை மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கை மிக வேகமாகச் சீர்குலைந்து வருகின்ற ஒரு கால கட்டத்தையே நாம் எதிர்கொண்டுள்ளோம்." - என்று அவர் இதன் போது குறிப்பிட்டார். (அ)

# ஒரு லட்சம் வாகனங்களின் இலக்கத் தகடுகள் தேக்கம்!

கொழும்பு, ஜூலை. 14

அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்படுவதற்கு முன்பு அச்சிடப்பட்ட சுமார் 1,00,000 வாகன இலக்கத் தகடுகளில், இருபது தகடுகளை மட் டுமே வாகன உரிமையாளர்கள் பெற்றுக்கொண்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அச்சிடப்பட்ட சுமார் 100,000 வாகன இலக்கத் தகடுகள், உரிமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்படாத தால், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் தேங்கிக் கிடந்தன.

உரிமை மாற்றத்தின்போது மாகாணங்களை மாற்றிக்கொண்ட வாகனங்களிடமிருந்து பெறப் பட்ட பெருமளவிலான வாகனப் பதிவுத் தகடுகள் அக்காலகட்டத்தில் வாகன இறக்குமதி நடைபெறாத நிலையிலும் இவ்வாறு குவிந்திருந்ததாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜூன் 30ஆம் திகதிக்குள் தேங்கிக்கிடக்கும் இந்த வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்ளாவிட்டால் அவை பழைய இரும்புக்கு அனுப்ப ப்படும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக இரண்டு மாதங்களுக்கு முன்பே அறிவித்திருந்தது.

எனினும், அக்குறிப்பிட்ட காலத்திற்குள் 20 இற்கும் குறைவான இலக்கத் தகடுகளே உரிமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார். (அ)

# நீதி அமைச்சருக்கு எதிரான பிரேரணையால் பயனில்லை!

## சீலரத்ன தேரர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை. 14

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையால் எந்தவொரு பயனும் ஏற்படப்போவதில்லை என ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தில் அரசுக்கு 160 உறுப்பினர்களின் பலம் உள்ளது. ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் தற்போதைய சூழலில் ஒரே கொள்கையுடையவர்களாகச் செயற்படுவதால், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசு மிக எளிதாகத் தோற்கடித்துவிடும். எனவே, இவ்வாறான பிரேரணைகளைக் கொண்டு வருவதில் அர்த்தமில்லை.

நீதித்துறையைப் போன்ற பொறுப்பு வாய்ந்த பதவிகளைச் சரியாகக் கையாளுவதற்குப் பக்குவமும், முதிர்ச்சியும் அவசியம், அமைச்சர் இன்னும் சிறுபிள்ளைத்தனமாகவே செயற்படுகின்றார்.

பாராளுமன்றத்துக்குள் மன்னிப்புக் கோருவது மட்டுமே தீர்வாகாது. நீதி அமைச்சின் பொறுப்பு என்பது கண்ணீர் சிந்துவதோ அல்லது நாடகமாடுவதோ அல்ல. மாறாக, சிறைச்சாலைகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு நடைமுறைச் சாத்தியமான மருத்துவப் புனர்வாழ்வு மற்றும் நிர்வாகத் தீர்வுகளைக் காண்பதே ஆகும்.

நாட்டின் ஒட்டுமொத்த சிறைச்சாலைத் துறையும் இன்று சீர்குலைந்துள்ளமை அரசின் நிர்வாகப் பலவீனத்தையே காட்டுகின்றது. கௌரவமான அரசியல் பின்னணி கொண்ட ஒருவரின் மகனாக இருந்தும், அமைச்சர் செயற்படும் விதம் நீதி அமைச்சுக்கே அவப்பெயரைத் தேடித் தருகின்றது- என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org